# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா.20 (LW–11 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | காட்டுராஜா | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | பழனிச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **09.08.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது நிலக்கோட்டை அழகம்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கில் இறந்து போன சென்ராயனை தெரியும். அவர் 25 ஆண்டுகளாக நண்பர் என்ற முறையில் தெரியும். சென்ராயன் குடும்பத்தாரை எனக்கு தெரியும். சென்ராயன் அவரது குடுப்பத்தை பற்றி என்னிடம் பேசுவர். அப்போது அவருடைய மனைவிக்கும், அவருக்குமிடையே கருத்து வேறுபாடு இருந்தது. இது சம்பந்தமாக நிலக்கோட்டை மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். புகாரின் பெயரில் காவல் துறையினர் இருவரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தனர். புகாரில் என்ன விபரம் இருந்தது என்று தெரியாது. 3 ஆண்டுகளுக்கு முன்பு, தினசரி நான் இறந்து போன சென்ராயனிடம் தொலைபேசியில் பேசுவேன். சம்பவம் நடந்த அன்று காலை 6.00 மணியளவில் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது சென்ராயன் தொலைபேசியை எடுக்கவில்லை. அதன் பின்னர் பக்கத்து ஊர்காரர்களிடம் தொடர்பு கொண்டு விசாரித்த போது அவர் இறந்துவிட்டதாக கூறினர். நான் உடனே சென்ராயன் வீட்டில் சென்று பார்த்தேன். வீட்டிற்கு போய் பார்த்த போது சென்ராயன் மனைவி இருந்தார். அப்போது வீட்டின் மையப்பகுதி மற்றும் வெளிப்புற பகுதியில் இரத்தம் காணப்பட்டது. சென்ராயனை பார்த்த போது அவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார். அங்கு வேறு எதுவும் நான் பார்க்கவில்லை. பிறகு சென்ராயனை மருத்துவமனைக்கு ஊரில் உள்ள பெரியோர்கள் அழைத்து சென்றார்கள். அதன் பின் மறுநாள் சென்ராயனின் மனைவியிடம் நான் சென்ராயன் எப்படி இறந்தார் என்று கேட்டேன். அப்போது என் செல்போனில் சென்ராயன் மனைவி சொன்ன விபரத்தை என் மொபைல் போனில் வீடியோவாக பதிவு

செய்தேன். அந்த வீடியோவை நிலக்கோட்டையில் உள்ள சி.டி போடும் கடையில் கொடுத்து சிடி போட்டு வாங்கினேன். அந்த சிடியை நிலக்கோட்டை போலீசில் ஒப்படைத்தேன். நான் சென்ராயன் மனைவியிடம் "உண்மையை சொல்லுமா, அப்போது தான் பிரச்சனையில் இருந்து விடுவிக்க முடியும்" என்று நான் கேட்டேன். சென்ராயன் மனைவி" நானும் அய்யனார் இருவரும் சேர்ந்து கம்பியால் தலையில் அடித்து தலையணையால் முகத்தை மூடி நாங்கள் இருவரும் கொன்றுவிட்டோம். அந்த இரத்தகரையை எடுத்து வாஸ்பேசனில் ஊற்றி கழுவி விட்டோம்". சைடியில் சுவரில் இரத்தகரை படிந்திருந்தது, என்ன இரத்தகரை என்று கேட்டேன், தன் சேலையில் படிந்த இரத்தத்தை சுவரில் தடவி பேனில் தூக்கு மாட்டி செத்தது போல் காட்டுவதற்காக அவ்வாறு செய்ததாக சொன்னார். நான் போலீசாரிடம் கொடுத்த சிடி தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சிடி தானே என்றால் ஆமாம். அந்த சிடியை குறியீடு செய்வதற்கு எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்தார். மேலும், மேற்படி சிடியின் நகலை எதிரிகளுக்கு வழுங்கவில்லை என்றும் வாதிட்டார். எந்த மொபல் போனில் பதிவு செய்யப்பட்டதோ அந்த குறிப்பிட்ட மொபல் போனையோ, அதில் உள்ள மெமரிக்கார்டையோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், அந்த மொபல் போனை எந்த கடையில் கொடுத்து, எந்த தொழில் நுட்பத்தில், எந்த கருவியின் மூலம் அவ்வாறு சிடி எடுக்கப்பட்டது என்ற விபரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அதனால் இந்த சிடி குறியீடு செய்ய முடியாது என்றும் ஆட்சேபனை தெரிவித்தார். இந்த வழக்கின் மிக முக்கியமான பொருண்மையை விளக்குவதாலும் அடிப்படை ஆதாரம் என்பதாலும் ஆட்சேபனையுடன் மேற்படி சிடியை குறியீடு செய்யலாம் என்று அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டார். இரண்டு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. (மேற்படி சிடி எலக்ட்ரானிக் Evidence என்பதாலும் Secondary Evidence என்பதாலும் இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 65(பி)(4) கீழான சான்றிதழ் தாக்கல் செய்யவேண்டும். ஆனால் மேற்படி சிடிக்கான சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், அர்ஜூன் பன்டிட் ராவ் என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பின் படி மேற்படி சிடி எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனைகுட்பட்டு குறியீடு செய்யப்படலாம் என்றும், 65(பி)(4) சான்றிதழ் தாக்கல் செய்யும் பட்சத்தில் மேற்படி சிடி இவ்வழக்கில் சாட்சியமாக ஏற்கப்படும் என்பதன் அடிப்படையிலும், மேற்படி சிடியின் உண்மை தன்மை மற்றும், நம்பகத்தன்மை பொறுத்து மேற்படி சிடி

ஆவணமாக குறியீடு செய்ப்படுவது எவ்விதத்திலும் பாதிக்கதாது என்பதால் மேற்படி ஆட்சேபனைகுட்பட்டு, மேற்படி சிடி குறியீடு செய்ய அனுமதிக்கப்படுகிறது) மேற்படி ஆட்சேபனைக்குட்பட்டு அந்த சிடி **அ.சா.ஆ.14**ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.08.09 19:46:13 +0530

Additional District Judge,

Dindigul.